Administrative Appeals Tribunal

Migration & Refugee Division

# அகதிகள் மீள்பரிசீலனை செயல்பாட்டு முறை - MR பிரிவு

*'புலப்பெயர்வு சட்டம் 1958'*-இன் கீழ் 'உள்நாட்டு விவகாரத் திணைக்கள' அமைச்சரால், அல்லது அமைச்சரது பிரதிநிகளான அதிகாரிகளால் மேற்கொள்ளப்படும் முடிவுகளை மீள்பரிசீலனை செய்வதற்கான அதிகாரத்தினைக் கொண்டதொரு சட்டரீதியான அமைப்பாவோம் நாங்கள்.

பெரும்பான்மையான தருணங்களில், விண்ணப்பதாரி ஒருவர் 'அகதி' என்ற சொல்லின் அர்த்தத்தினைப் பூர்த்தி செய்கிறாரா என்பதை, அல்லது மாறாக, ஆஸ்திரேலியாவிலிருந்து இன்னொரு நாட்டிற்கு அகற்றப்பட்டால் விண்ணப்பதாரி ஒருவருக்குக் கணிசமான தீங்கு ஏற்படுவதற்கான உண்மையான அபாயம் இருக்கிறதா என்ற பிரதானமான விடயங்களை நாங்கள் கருத்தில் கொள்வோம்.

இந்த மீள்பரிசீலனை செயல்பாட்டு முறையினைப் பற்றிய மேலதிகத் தகவல்களை www.aat.gov.au எனும் வலைத்தலத்தில் நீங்கள் காணலாம்.

## மீள்பரிசீலனைக்காக யார் விண்ணப்பிக்கலாம்?

பாதுகாப்பு விசா ஒன்றை உங்களுக்கு வழங்காமல் இருப்பதற்கான, அல்லது பாதுகாப்பு விசா ஒன்றை இரத்து செய்வதற்கான முடிவு ஒன்று மேற்கொள்ளப்பட்டால், அந்த முடிவினை திணைக்களம் உங்களுக்கு அறியத்தரும். அந்த முடிவினை மீள்பரிசீலனை செயவதற்காக எமக்கு விண்ணப்பிப்பதற்கான உரிமை உங்களுக்கு இருக்கிறதா என்று இந்த அறிவிப்பு உங்களுக்குத் தெரிவிக்கும்.

## மீள்பரிசீலனை ஒன்றிற்காக நான் எப்போது விண்ணப்பித்தாக வேண்டும்?

மீள்பரிசீலனைக்காக விண்ணப்பிக்க நீங்கள் உத்தேசித்தால், கால வரையறைகளை எம்மால் நீட்டிக்க இயலாது என்பதையும், கீழே சொல்லப்பட்டுள்ள கால வரையறைகளைக் கடந்து இடப்படும் விண்ணப்பங்களை எம்மால் ஏற்றுக்கொள்ள இயலாது என்பதையும் நீங்கள் கவனிக்க வேண்டும்:

- நீங்கள் சமூகத் தடுப்பினை உள்ளடக்கிய **குடிவரவுத் தடுப்பில் இருந்தால்**, திணைக்களத்தினால் எடுக்கப்பட்ட முடிவு உங்களுக்குத் தெரிவிக்கப்பட்டுவிட்டது என்று எடுத்துக்கொள்ளப்படும் திகதியில் இருந்து 7 அலுவல் நாட்களுக்குள்ளாக உங்களுடைய விண்ணப்பத்தினை நாங்கள் கட்டாயமாகப் பெற்றாக வேண்டும்.

- நீங்கள் **குடிவரவுத் தடுப்பில் இல்லையானால்,** திணைக்களத்தினால் எடுக்கப்பட்ட முடிவு உங்களுக்குத் தெரிவிக்கப்பட்டுவிட்டது என்று எடுத்துக்கொள்ளப்படும் திகதியில் இருந்து 28 நாள்-காட்டி நாட்களுக்குள்ளாக உங்களுடைய விண்ணப்பத்தினை நாங்கள் கட்டாயமாகப் பெற்றாக வேண்டும்.

விண்ணப்பம் ஒன்றினை நீங்கள் தபால் மூலமாகத் தாக்கல் செய்தால், கால வரையறை முடிவடைவதற்கு முன்பாக உங்களுடைய விண்ணப்பம் பெறப்படுவதற்குப் போதுமான காலம் இருப்பதை நீங்கள் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.

## எனக்கு அறிவிப்பு செய்யப்பட்டுவிட்டதாக எப்போது எடுத்துக்கொள்ளப்படும்?

உங்களுக்கு அறிவிப்பு செய்யப்பட்டுவிட்டதாக எடுத்துக்கொள்ளப்படும் திகதி என்ன என்பது எந்த வழியில் திணைக்களம் உங்களுக்கு முடிவினை அறிவித்தது என்பதைப் பொறுத்து அமையும்.

மின்னஞ்சல் அல்லது தொலைநகல் மூலமாக முடிவின் அறிவிப்பு அனுப்பப்பட்டிருந்தால், அந்த அறிவிப்பு அனுப்பப்பட்ட தினத்தின் இறுதியில் உங்களுக்கு அறிவிப்பு செய்யப்பட்டுவிட்டதாக எடுத்துக்கொள்ளப்படும்.

கையளிப்பு மூலம் முடிவின் அறிவிப்பு கொடுக்கப்பட்டால், உங்களுக்கு அல்லது உங்களுடைய அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள பெறுநருக்கு அது கையளிக்கப்பட்ட நேரத்தில் உங்களுக்கு அறிவிப்பு செய்யப்பட்டுவிட்டதாக எடுத்துக்கொள்ளப்படும்.

தபால் மூலமாக முடிவின் அறிவிப்பு அனுப்பப்பட்டிருந்தால், அந்த அறிவிப்புக் கடிதத்தின் திகதியில் இருந்து 7 அலுவல் நாட்களுக்குப் பிறகு உங்களுக்கு அறிவிப்பு செய்யப்பட்டுவிட்டதாக எடுத்துக்கொள்ளப்படும்.

உங்களுடைய பாதுகாப்பு விசா விண்ணப்பம் சம்பந்தப்பட்ட கடிதப் போக்குவரத்துகளைப் பெறுவதற்கான அதிகாரத்தினை நீங்கள் ஒருவருக்கு அளித்தால், அந்த நபர் உங்களுடைய ‘அதிகாரமளிக்கப்பட்ட பெறுநர்’ என்று எடுத்துக்கொள்ளப்படுவார். உங்களுடைய ‘அதிகாரமளிக்கப்பட்ட பெறுநர்’ திணைக்களத்தினால் அறிவிப்பு செய்யப்படும் நேரத்தில் உங்களுக்கு அறிவிப்பு செய்யப்பட்டுவிட்டதாக எடுத்துக்கொள்ளப்படும்.

## மீள்பரிசீலைக்காக நான் எவ்வாறு விண்ணப்பிப்பது?

உங்களுடைய விண்ணப்பத்தினை நீங்கள் இணையம் மூலமாக தாக்கல் செய்யலாம், அல்லது 'R1 -*மீள்பரிசீலனை விண்ணப்பம் - அகதி*' (R1 - *Application for review – Refugee*) எனும் படிவத்தினை நீங்கள் பூர்த்தி செய்து தாக்கல் செய்யலாம். www.aat.gov.au எனும் எமது வலைத்தலத்திலிருந்து, அல்லது எமது அலுவலக(பதிவகம்)ங்களில் ஒன்றிலிருந்து நீங்கள் இந்தப் படிவத்தினைப் பெறலாம்.

உங்களுடைய மீள்பரிசீலனை விண்ணப்பத்திற்கு ஆதாரமாக இருக்கக்கூடிய மேலதிகக் கோரிக்கைகள் அல்லது சான்றுகளை நீங்கள் கொடுக்கலாம். திணைக்களத்திற்குக் கொடுக்கப்படாத மேலதிகத் தகவல்கள் அல்லது சான்றுகளை நீங்கள் கொடுத்தால், சில தருணங்களில், நீங்கள் கொடுத்துள்ள விடயங்களின் நம்பகத்தன்மையையும், திணைக்களத்திற்கு அவை ஏன் முன்பு கொடுக்கப்படவில்லை என்பதையும் நாங்கள் கருத்தில் கொள்ளவேண்டியிருக்கும். ஆங்கிலத்தில் இல்லாத எவ்வொரு ஆவணங்களும், தகுதி பெற்ற மொழிபெயர்ப்பாளர் ஒருவரால் மொழிபெயர்க்கப்பட வேண்டும். மூல ஆவணங்கள் மற்றும் மொழிபெயர்ப்புகள் ஆகிய இரண்டையும் நீங்கள் கொடுக்கவேண்டும்.

## என்னுடைய விண்ணப்பத்தினை இடுவதில் நான் உதவி நாடவேண்டுமா?

தொழில்ரீதியான அறிவுரை அல்லது உதவியை ஒருவர் பெறுகிறாரா அல்லது இல்லையா என்பதைப் பொறுத்து மீள்பரிசீலனை ஒன்றின் முடிவு அமையாமல் இருப்பதை உறுதிப்படுத்தவது எமது நோக்கம். இருந்தாலும், அறிவுரை மற்றும் உதவியை நீங்கள் நாடலாம்.

'*புலப்பெயர்வு சட்டம் 1958*-இன் கீழ் குறிப்பிட்ட சிலர் மட்டுமே 'புலப்பெயர்வு உதவி'யை அளிக்க இயலும். பின்வருவோர் இவர்களில் உள்ளடங்குவர்:

- பதிவுபெற்ற புலப்பெயர்வு முகவர் ஒருவர்
- பயிற்சி செய்வதற்கான சான்றிதழ் உள்ள ஆஸ்திரேலிய சட்டதரணி ஒருவர்
- நெருக்கமான குடும்ப அங்கத்தவர் ஒருவர் (உங்களுடைய வாழ்க்கைத்துணை, பிள்ளை, பெற்றோர், சகோதரன் அல்லது சகோதரி), அல்லது
- நீங்கள் விசா விண்ணப்பதாரி என்றால், உங்களைப் 'பெயர்-மொழிபவர்' (nominator) அல்லது 'ஏற்பாதரவாளி' (sponsor) ஒருவர்.

உங்களுடைய விண்ணப்பத்தினை ஆயத்தம் செய்வதற்கான, அல்லது AAT ('நிர்வாக மீள்பரிசீலனை முறைமன்றம்')-யில் உங்களைச் சார்புபடுத்துவதற்கான புலப்பெயர்வு செயல்பாட்டு முறைகளில் உங்களுக்கு உதவ ஒருவருடைய அறிவு அல்லது அனுபவத்தினை ஒருவர் பயன்படுத்துவது 'புலப்பெயர்வு உதவி'யில் உள்ளடங்கும்.

பதிவுபெற்ற புலப்பெயர்வு முகவர்கள் அல்லது பயிற்சி செய்வதற்கான சான்றிதழ் வைத்திருக்கும் ஆஸ்திரேலிய சட்டதரணிகள் மட்டுமே 'புலப்பெயர்வு உதவி'க்காகக் கட்டணம் ஒன்றைச் செலுத்துமாறு உங்களைக் கேட்க இயலும்.

உங்களுடைய மீள்பரீலனைக்கான உதவிகளைக் கண்டறிவதைப் பற்றிய மேலதிகத் தகவல்களை எமது வலைத்தலத்திலுள்ள Assistance (உதவி) எனும் பக்கத்தில் இருந்து நீங்கள் பெறலாம்.

## மீள்பரிசீலனை விண்ணப்பம் ஒன்றிற்கு எவ்வளவு செலவாகும்?

மீள்பரிசீலனைக்காக நீங்கள் விண்ணப்பிக்கும்போது செலுத்தப்படவேண்டிய கட்டணம் எதுவும் இல்லை. இருப்பினும், உங்களுடைய மீள்பரிசீலனை விண்ணப்பம் வெற்றியடையாவிட்டால், கட்டணம் ஒன்றைச் செலுத்துமாறு நீங்கள் வேண்டப்படுவீர்கள்.

1 ஜூலை 2023-இற்குப் பிறகு தாக்கல் செய்யப்படும் விண்ணப்பங்களுக்கு $2,076 செலுத்துக் கட்டணமாகும்.

## நீங்கள் என்னுடன் எவ்வாறு தொடர்புகொள்வீர்கள்?

கடிதப் போக்குவரத்துகளை உங்கள் சார்பாகப் பெறுவதற்கு ஒரு நபரை (உங்களது அதிகாரம் பெற்ற பெறுநர்) நியமிக்கும் தெரிவினை நீங்கள் மேற்கொள்ளலாம். பிரதிநிதி ஒருவரைக் கொண்டுள்ள பெரும்பான்மையான விண்ணப்பதாரிகள் அந்தப் பிரதிநிதியை அவர்களது அதிகாரமளிக்கப்பட்ட பெறுநராக நியமிப்பார்கள்.

அதிகாரமளிக்கப்பட்ட பெறுநர் ஒருவரை நீங்கள் நியமித்தால், அனைத்துக் கடிதப் போக்குவரத்துகளும் அந்த நபருக்கு அனுப்பப்படும், மற்றும் அவை உங்களுக்கு அனுப்பப்பட்டுவிட்டதாக எடுத்துக்கொள்ளப்படும். கடிதப் போக்குவரத்தின் ஒரு பிரதியை மட்டுமே உங்களுக்கு அனுப்புவோம், அத்துடன், புலப்பெயர்வு முகவர் ஒருவரை நீங்கள் உங்களுடைய பிரதிநிதியாக அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பெறுநராக நியமித்திருந்தால் அதன் பிரதி ஒன்றை உங்களுடைய அதிகாரமளிக்கப்பட்ட பெறுநருக்கும் அனுப்புவோம், மற்றும் அந்த புலப்பெயர்வு முகவருடைய பதிவு இடை நிறுத்தம் செய்யப்பட்டிருந்தால், இரத்து செய்யப்பட்டிருந்தால் அல்லது காலாவதி ஆகியிருந்தால், உங்களுடைய மீள்பரிசீலனையைப் பற்றிய ஆவணங்களை உங்களுடைய பிரதிநிதி அல்லது அதிகாரமளிக்கப்பட்டுள்ள பெறுநருக்குக் கொடுக்க

வேண்டாம் என்று நீங்கள் சொல்லும் வரை அவற்றை நாங்கள் அவருக்குக் கொடுத்துக்கொண்டிருப்போம்.

அதிகாரமளிக்கப்பட்டுள்ள பெறுநர் ஒருவரை நீங்கள் நியமிக்கவில்லை என்றால், அனைத்துக் கடிதப் போக்குவரத்துகளும் உங்களுக்கு அனுப்பப்படும்.

பொதுவாக, மின்னஞ்சல் வசதி உள்ளவர்களுக்குக் கடிதப் போக்குவரத்து மின்னஞ்சல் மூலமாக அனுப்பப்படும். தபால் அல்லது தொலை-நகல் மூலமாகவும் கடிதப் போக்குவரத்துகளை நாங்கள் அனுப்பக்கூடும், அல்லது சில சூழல்களில் ஆவணங்களை நாங்கள் கையளிப்பு செய்யக்கூடும்.

## மீள்பரிசீலனைக்கான என்னுடைய விண்ணப்பத்தினை நான் தாக்கல் செய்த பிறகு என்ன ஆகும்?

உங்களுடைய விண்ணப்பத்தினை நாங்கள் பெற்றுக்கொண்டோம் என்பதை உறுதிப்படுத்திக் கடிதம் ஒன்றை நாங்கள் உங்களுக்கு அனுப்புவோம், அத்துடன் நாங்கள் கருத்தில் கொள்ளவேண்டும் என்று நீங்கள் விரும்பும் எவ்வொரு ஆவணங்கள், தகவல்கள் அல்லது சான்றுகளை எமக்கு அனுப்புமாறு உங்களைக் கேட்போம். இயலுமான தருணங்களிலெல்லாம், இப்படிப்பட்ட ஆவணங்களை இணையம்/எலக்ட்ரானிக் மூலமாக அனுப்பவேண்டுமென விரும்புவோம்.

திணைக்களத்திடம் இருக்கும் உங்களுடைய வழக்கு சம்பந்தப்பட்ட ஆவணங்களை எமக்கு அனுப்புமாறு திணைக்களத்தினை நாங்கள் கேட்போம். உங்களுடைய விண்ணப்பத்தின் செல்லுபடித்தன்மையையும் நாங்கள் மதிப்பீடு செய்வோம். செல்லுபடியாகக் கூடிய மீள்பரிசீலனை விண்ணப்பம் இடப்பட்டிருந்தால் மட்டுமே முடிவு ஒன்றினை எம்மால் மீள்பரிசீலனை செய்ய இயலும். உங்களுடைய விண்ணப்பம் செல்லுபடியாகாதது போலத் தோன்றினால் அதை உங்களுக்கு அறியத்தருவோம்.

உங்களுடைய விண்ணப்பத்தினைக் கருத்தில்கொள்ள நாங்கள் ஆயத்தமாக இருக்கும் பொழுது, தகவல்களைப் பெறுவதற்காக, அல்லது தகுந்தது என நாங்கள் கருதும் பாதகமானத் தகவல்களைப் பற்றிய உங்களுடைய கருத்துகளைத் தெரிவிக்குமாறு கேட்டு உங்களுக்கு மீண்டும் நாங்கள் எழுதக்கூடும்.

**குறிப்பிடப்பட்டுள்ள காலத்திற்குள் இந்தத் தகவல்களை அல்லது கருத்துரைகளை நீங்கள் அளிக்கவில்லை என்றால், மேற்கொண்ட அறிவிப்பு எதையும் செய்யாமல் அல்லது வழக்கு-விசாரணை ஒன்றை உங்களுக்கு அளிக்காமல் உங்களுடைய விடயத்தைப் பற்றிய முடிவு ஒன்றை நாங்கள் மேற்கொள்ளக்கூடும்.**

## முடிவு எவ்வாறு மேற்கொள்ளப்படும்?

திணைக்களத்தின் ஆவணங்களையும், நீங்கள் எமக்குக் கொடுத்துள்ள எவ்வொரு மேலதிகத் தகவல்களையும் கருத்தில்கொண்ட பிறகு, வழக்கு-விசாரணை ஒன்றிற்கு வருமாறு உங்களை வழமையாக அழைப்போம். எம்மிடமுள்ள ஆவணங்களின் அடிப்படையில் வழக்கு-விசாரணைக்கு முன்பாகவே உங்களுக்கு சாதகமான முடிவு ஒன்றை எம்மால் மேற்கொள்ள இயலுமானால், அல்லது வழக்கு-விசாரணை ஒன்று இல்லாமலேயே நாங்கள் முடிவு ஒன்றை மேற்கொள்ளலாம் என்று நீங்கள் சம்மதித்தால், வழக்கு-விசாரணை ஒன்றை நாங்கள் நடத்த மாட்டோம். தகவல்கள் கேட்டு எம்மிடமிருந்து வரும் குறிப்பிட்ட ஒரு வேண்டுகோளைத் தொடர்ந்து, குறிப்பிட்டுச் சொல்லப்பட்டுள்ள காலத்திற்குள் கருத்துரைகள் அல்லது தகவல்களை நீங்கள் அளிக்கத் தவறும் பட்சத்தில் வழக்கு-விசாரணை ஒன்றை நாங்கள் உங்களுக்கு அளிக்காமல் இருக்கலாம்.

வழக்கு-விசாரணையின் போது உங்களிடம் கேள்விகள் கேட்கப்படும், மற்றும் உங்களுடைய கோரிக்கைகளுக்கு ஆதாரமாக இருக்கும் சான்றுகளையும், விவாதங்களையும் வாய்-மொழி மூலமாக முன்வைப்பதற்கான வாய்ப்பு ஒன்று உங்களுக்கு இருக்கும். வழக்கு-விசாரணையின் போது நீங்கள் கொடுக்கும் தகவல்கள் மற்றும் இதர மூலங்களிலிருந்து அவருக்குக் கிடைத்துள்ள தகுந்த தகவல்கள் எதனையும் உள்ளடக்கிய அவருக்கு முன்பாகவுள்ள தகவல்களைக் கருத்தில்கொண்ட பிறகு முறைமன்ற அங்கத்தவரானவர் அவருடைய முடிவினை மேற்கொள்வார்.

## வழக்கு-விசாரணையைப் பற்றி நான் எவ்வாறு தெரிந்துகொள்வேன்?

வழக்கு-விசாரணை ஒன்றிற்கு நீங்கள் அழைக்கப்பட்டால், வழக்கு-விசாரணை ஒன்றிற்கு வருமாறு அழைத்தும், வழக்கு-விசாரணைத் திகதி ஒன்றை உங்களுக்குத் தெரிவித்தும் கடிதம் ஒன்றை உங்களுக்கு அனுப்புவோம். இந்த வழக்கு-விசாரணைத் திகதியை எழுத்து மூலமாக உறுதிப்படுத்துமாறும், உங்களுடைய வழக்கிற்கு ஆதாரமாக யாரிடமிருந்தாவது நாங்கள் சாட்சியம் பெறவேண்டுமென நீங்கள் விரும்பினால் அவரது விபரங்களைக் கொடுக்குமாறும் உங்களைக் கேட்கும் படிவம் ஒன்று அக் கடிதத்துடன் இணைக்கப்பட்டிருக்கும்.

## வழக்கு-விசாரணையின் பொழுது யார் சமூகமாகி இருப்பார்கள்?

உங்களுக்கு அறிவுரைப்பதற்காக பிரதிநிதி அல்லது அறிவுரையாளர் ஒருவரை நீங்கள் உடன் அழைத்துவரலாம். உங்களுடைய வழக்கில் உங்களுக்காக வாதாட அந்த நபரை அனுமதிக்க வேண்டிய தேவைப்பாடு எமக்கு இல்லை. இருப்பினும், வழக்கு-விசாரணை முடிவடைவதற்கு

முன்பாக, உங்கள் சார்பாகப் பேசுவதற்கு அந்த நபரை முறைமன்ற அங்கத்தவர் அனுமதிப்பது வழக்கம். உங்களுக்கு ஆதரவாக இருப்பதற்கென நண்பர் அல்லது உறவினர் ஒருவரையும் நீங்கள் அழைத்து வரலாம். '*வழக்கு-விசாரணைகளைப் பற்றிய தகவல்கள் (MR18)*' எனும் தகவல் ஏட்டில் வழக்கு-விசாரணைகளைப் பற்றிய மேலதிகத் தகவல்கள் அடங்கியுள்ளன.

## மொழிபெயர்த்துரைப்பாளர் ஒருவரை நான் வைத்துக்கொள்ள இயலுமா?

உங்களுக்கு அல்லது உங்களுடைய சாட்சியாளர்களுக்கு வழக்கு-விசாரணையின் போது தொடர்பாடல் கொள்வதில் உதவி தேவைப்பட்டால், தகுதி பெற்ற மொழிபெயர்த்துரைப்பாளர் ஒருவரை நாங்கள் அளிப்போம், அத்துடன் மொழிபெயர்த்துரைப்பாளரது சேவைகளுக்கான செலவினையும் செலுத்துவோம்.

ஆங்கிலம் பேசாதவர்களுக்கு 'மொழிபெயர்ப்பு மற்றும் மொழிபெயர்த்துரைப்பு' (Translating and Interpreting Services (TIS)) எனும் சேவையினர் எம்முடன் தொடர்புகொள்ள உதவியளிப்பர். அவர்களது தொலைபேசி இலக்கம் 131 450 ஆகும்.

## முடிவு எப்போது மேற்கொள்ளப்படும்?

ஒவ்வொரு வழக்கும் வெவ்வேறானது என்பதால், உங்களுடைய விடயத்தில் முடிவு ஒன்றை மேற்கொள்வதற்கு எமக்கு எவ்வளவு காலம் எடுக்கும் என்பதைச் சொல்வது சிரமம்.

சில தருணங்களில், வழக்கு-விசாரணையின் இறுதியில் முறைமன்ற அங்கத்தவர் முடிவை அறிவிக்கலாம். வாய்-மொழி மூலமாக மேற்கொள்ளப்பட்ட முடிவிற்கான காரணங்கள் என்ன என்பதற்கான எழுத்து மூலமான காரணங்களை உங்களுக்கு அனுப்ப முறைமன்ற அங்கத்தவர் முடிவு செய்யலாம், அப்படிப்பட்ட தருணத்தில் வழக்கு-விசாரணைக்குப் பிறகு 14 நாட்களுக்குள்ளாக இந்த காரணங்கள் உங்களுக்கு அனுப்பப்படும். மாறாக, முறைமன்ற அங்கத்தவர் முடிவினை அறிவிக்கலாம், அத்துடன் வழக்கு-விசாரணையின் இறுதியில் முடிவிற்கான காரணங்களின் வாய்-மொழி மூலமான கூற்று ஒன்றினை ஏற்படுத்தலாம். இப்படி நடந்தால், முடிவு மற்றும் வழக்கு-விசாரணையின் பொழுது சொல்லப்பட்ட முடிவிற்கான காரணங்களின் எழுத்து வடிவ உரு ஒன்றினை உங்களுக்கு அளிக்கவேண்டுமென்ற எழுத்து மூலமான வேண்டுகோளினை வழக்கு-விசாரணை முடிவுற்ற 14 நாட்களுக்குள்ளாக எமக்கு ஏற்படுத்தும் உரிமம் உங்களுக்கு இருக்கிறது.

இருப்பினும், பெரும்பான்மையான தருணங்களில் வழக்கு-விசாரணையின் இறுதியில் முடிவு ஒன்று மேற்கொள்ளப்படாது, மற்றும் முறைமன்ற அங்கத்தவர் முடிவு ஒன்றை மேற்கொள்ளும்போது, முடிவைப் பற்றிய

எழுத்து-மூலமான அறிக்கை ஒன்றை உங்களுக்கும் திணைக்களத்திற்கும் நாங்கள் அனுப்புவோம்.

## எமக்குக் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் எவ்வாறு பயன்படுத்தப்படும்?

உங்களுடைய மீள்பரிசீலனை விண்ணப்பத்தினை மதிப்பீடு செய்வதற்காக எமக்குக் கொடுக்கப்பட்ட தகவல்கள் பயன்படுத்தப்படும். மீள்பரிசீலனைச் செயல்பாடுகளின்போது எமக்குக் கொடுக்கப்படும் எவ்வொரு தகவல்களும் செயல்பாடுகளில் பங்குபற்றும் மற்றவர்களுக்கும், அல்லது மீள்பரிசீலனை நோக்கங்களுக்காக மற்ற நபர்கள் அல்லது அமைப்புகளுக்கும் கொடுக்கப்படலாம், உதாரணமாக, வல்லுனக் கருத்து அல்லது மதிப்பீடு ஆகியவற்றை நாடுவதற்காக இவ்வாறு செய்யப்படலாம். குறிப்பிட்ட சில சூழல்களில் உங்களுடைய விண்ணப்பத்தைப் பற்றிய தகவல்களை மற்ற அரசு மற்றும் அரசு-சாரா நபர்கள் அல்லது அமைப்புகளுக்கும் நாங்கள் கொடுக்கக்கூடும். திணைக்களம், 'புலப்பெயர்வு முகவர்கள் பதிவு அதிகார அலுவலகம்' (Office of the Migration Agents Registration Authority), நீதிமன்றங்கள் மற்றும் சட்ட அமலாக்க முகமைகள் ஆகியன இவற்றில் உள்ளடங்கும்.

வழக்கு-விசாரணைகள் அந்தரங்கமானவை, பொதுமக்கள் இவற்றைப் பார்வையிட இயலாது.

உங்களுடைய வழக்கில் எடுக்கப்பட்ட முடிவிற்கான காரணங்களைப் பற்றிய எழுத்து மூல அறிக்கை ஒன்றை நாங்கள் ஆயத்தம் செய்தால், அது பகிரங்கப்படுத்தப்படலாம் மற்றும் AustLII -யினரது வலைத்தல(www.austlii.edu.au)த்தில் வெளியிடப்படலாம். இருப்பினும், உங்களையோ, உங்களுடைய உறவினர்கள் அல்லது உங்களைச் சார்ந்திருப்பவர்கள் எவரையுமோ அடையாளப்படுத்தக் கூடிய பெயர்கள் அல்லது மற்ற விபரங்கள் எதுவும் வெளியிடப்படும் முடிவில் உள்ளடக்கப்படாது. நாங்கள் வெளியிடும் முடிவுகளைப் பற்றிய மேலதிகத் தகவல்களுக்கு எமது வலைத்தலத்தில் உள்ள 'முடிவுகள் வெளியீட்டுக் கொள்கை' (Publication of Decisions Policy)-யைப் பாருங்கள்.

## முக்கியம் - தொடர்பு விபரங்களில் ஏற்படும் மாற்றங்கள்

உங்களுடைய விலாசம் அல்லது தொலைபேசி இலக்கம் அல்லது உங்களுடைய அதிகாரமளிக்கப்பட்டுள்ள பெறுநரது பெயர் அல்லது விலாசத்தில் மாற்றம் எதுவும் ஏற்பட்டால் அதை நீங்கள் எமக்கு உடனடியாக அறியத்தர வேண்டும். உங்களுடைய தொடர்பு விபரங்களில் ஏற்படும் எவ்வொரு மாற்றத்தினையும் உங்களுடைய அதிகாரமளிக்கப்பட்டுள்ள பெறுநருக்கு நீங்கள் தெரிவிக்கவேண்டியதும் முக்கியம். அப்படி நீங்கள் செய்யவில்லையேல், வழக்கு-விசாரணைக்கான அழைப்பு அல்லது மற்ற முக்கியமான தகவல்களை நீங்கள் பெறாமல் போய்விடக்கூடும், அத்துடன் அடுத்த அறிவிப்பு எதும் இல்லாமலேயே

உங்களுடைய வழக்கின் மீது முடிவு எடுக்கப்பட்டுவிடக் கூடும். இந்த விபரங்களில் ஏற்படும் எவ்வொரு மாற்றத்தினையும் நீங்கள் திணைக்களத்திற்கும் தெரிவிக்கவேண்டும்.

உங்களைப் பற்றிய விபரங்களில் ஏற்படும் மாற்றங்களை நீங்கள் எழுத்து மூலமாக எமக்கு அறிவிக்கலாம், அல்லது எமது வலைத்தலத்தில் கிடைக்கும் 'MR6 *தொடர்பு விபரங்கள் மாற்றப் படிவம் MR - பிரிவு* (MR6- *Changeof contact details – MR Division*) எனும் படிவத்தினைப் பூர்த்தி செய்யலாம்.

### கருத்துரை ஒன்றை அளிக்க அல்லது முறைப்பாடு ஒன்றைச் செய்ய நான் விரும்பினால்?

எம்முடன் நீங்கள் கொண்ட செயல்-தொடர்புகளில் உங்களுக்குப் பிடித்தது எது என்பதை, அல்லது எந்த விடயங்களை நாங்கள் இன்னும் மேம்படுத்திக்கொள்ளலாம் என்று நீங்கள் நினைக்கிறீர்கள் என்பதை எமக்குச் சொல்வதன் மூலம் நீங்கள் எமக்கு உதவலாம். எமக்குப் பின்னூட்டல் அளிக்க நீங்கள் விரும்பினால், உங்களுடைய வழக்கினைக் கையாளும் அதிகாரிக்கு நீங்கள் அதைத் தெரிவிக்கலாம். மாறாக, எமது வலைத்தலத்தில் Contact us ('எம்முடன் தொடர்புகொள்ளுங்கள்')-இன் கீழுள்ள இணையவழி 'பின்னூட்டல் படிவ'த்தினை நீங்கள் பூர்த்தி செய்யலாம், அல்லது 'confidential' (அந்தரங்கமானது) என்று குறியிடப்பட்ட எழுத்துமூல முறைப்பாடு ஒன்றினை 'ஜி.பி.ஓ பெட்டி 9955, சிட்னி என்.எஸ்.டபிள்யூ 2001 (GPO Box 9955, Sydney NSW 2001) எனும் விலாசத்திற்கு அனுப்பலாம்.

## தாக்கல் செய்வதற்கான வழிகள்

### இணையம் மூலமாக

மீள்பரிசீலனை விண்ணப்பங்களை இணையவழியில் http://www.aat.gov.au/apply-online எனும் வலைத்தலத்தில் தாக்கல் செய்யலாம்.

### தபால் அல்லது தொலை-நகல் மூலமாக

Administrative Appeals Tribunal
GPO Box 9955, Sydney NSW 2001
Fax: (02) 9276 5599

Administrative Appeals Tribunal
GPO Box 9955, Melbourne VIC 3001
Fax: (03) 9454 6999

Administrative Appeals Tribunal
GPO Box 9955, Brisbane QLD 4001
Fax: (07) 3052 3069

Administrative Appeals Tribunal
GPO Box 9955, Adelaide SA 5001
Fax: (08) 8128 8099

Administrative Appeals Tribunal
GPO Box 9955, Perth WA 6848
Fax: (08) 6222 7299

## கையளிப்பு மூலமாக

**Sydney**
Level 6
83 Clarence Street
Sydney NSW 2000

**Melbourne**
Level 4
15 William Street
Melbourne VIC 3000

**Brisbane**
Level 6
296 Ann St
Brisbane QLD 4000

**Perth**
Level 13
111 St Georges Terrace
Perth WA 6000

**Adelaide**
Level 2
1 King William Street
Adelaide SA 5000

அலுவலக வேலை நேரங்களை www.aat.gov.au எனும் எமது வலைத்தலத்தில் காணலாம்.

## தொடர்பு விபரங்கள்

| | |
|---|---|
| வலைத்தலம் | www.aat.gov.au |
| மின்னஞ்சல் | mrdivision@aat.gov.au |
| தேசியத் தொலைபேசி விசாரிப்பு இலக்கம் | 1800 228 333 |
| நேஷனல் ரிலே சர்வீஸ் | www.relayservice.gov.au |